5. அறிவிப்பு.

காமன்வெல்த் பார்லிமெண்டரி சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையில் பேரவை உறுப்பினர்கள் உறுப்பினராதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வேண்டுகோள். நம் உறுப்பினர்கள் காமன்வெல்த் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளில் பெரும் பங்கு கொள்ள அந்த நிறுவனத்தில் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்று வேண்டப்படுகிறது. அதன் காரணமாக, உறுப்பினர்கள், காமன்வெல்த் பார்லிமெண்டரி அஸோசியேஷன் மாநாடுகள் கூடும் இடங்களில் சென்று பங்கு பெறும் வாய்ப்பு இருக்கும். திரு. ஆசைத்தம்பி அவர்களும், திரு. சௌந்திரராஜ மூப்பனார் அவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அப்படி மற்ற உறுப்பினர்களும் சென்று வர வேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது. ஆகவே பெருமளவில் அந்தச் நிறுவனத்தின் தமிழ்நாட்டுக் கிளையில் உறுப்பினர்களாகவேண்டும். அதற்கு ஆண்டுச் சந்தா ரூ. 5 தான். ஆயுள் சந்தா ரூ. 50. எல்லோரும் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

6. 1969-70-ம் ஆண்டிற்கான நிதி கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 20.—தொழில்கள்

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 20—தொழில்கள்* என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,88,08,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்கிற வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, மூடப்பட்ட ஆலைகளை அரசாங்கமே ஏற்று நடத்துகின்ற கொள்கை பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நான்கு சர்க்கரை ஆலைகளிலிருந்தும் கிடைக்கும் கரும்புச் சக்கையிலிருந்து கடலூரில் ஓர் காகித தொழிற்சாலை நிறுவுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து விவாதிக்க,

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,88,08,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, வறட்சியான பகுதிகளில், குறிப்பாக கோவில்பட்டி தாலுகாவின் விவசாயிகளுக்கு உப-தொழிலாக சிறு தொழில்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று விவாதிக்க,

* 217-301-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.